# ஹிந்தி எதிர்ப்புச் சத்தியாக்கிரகத்துக்கு ஆதரவு.

தஞ்சை மே 1

தஞ்சை ஸ்ரீ மத மாயாண்டி சுவாமிகள் மடாலயத்தில் பல ஆண்டுகளாக நிறுவப்பெற்றுள் சைவசித்தாந்த சபையில் 1938 வருஷம் மே மாதம் முதல்தேதியில் கூடியுள்ள மாபெரும் சபையில் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவு எய்தின. அவைகளைச் சபையின் காரியதரிசி சென்னை பிரதம மந்திரி அவர்களுக்கும் பிரசுர இலாகா மந்திரி அவாகளுக்கும் சில பத்திரிக்கைகளுக்கும அனுப்பும்படி கேட்டுக் கொண்டுள்ளார்கள். இராச மகேந்திரம் ஏப்பிரல் 27ந் தேதியில கே. என். ஸ்டாலியின் ஜெகதீஸ் என்பவர் ஹிந்தியை எதிர்த்து பிரதம மந்திரியாருக்கு முன்னறிவித்தும பயன் படாததால உண்ணாவிரத சத்தியாக்கிரகத்தை நாளது மீ 1தேதி முதல் அனுஷ்டிக்கப் போவதைத் தெரிந்து நாங்கள மிகமிக வருந்துகிறோம்.

பிரதமமந்திரியாரும், கல்வி மந்திரியாரும இனியாவது இரக்கமுற்று விரைவில் ஆவன செய்ய முன்வர எங்கள் மன எழுச்சியுடன் வேண்டுகிறோம்.

காரியதரிசி தஞ்சை
சைவசித்தாந்த சபை.